மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – ஆசிரியர் அறிமுகம்

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் அலைபேசி: 9486772491

# புலவர் குழந்தை
# வாழ்க்கை வரலாறு

இராவண காவியம் என்னும் ஒப்பிலாத தனித்தமிழ்ப் பெருங் காவியத்தை இயற்றித் தமிழ்மக்களிடையே புத்துணர்ச்சியினையும், இனவெழுச்சியினையும், தன்மானப் பண்பினையும் கிளர்ந்தெழச் செய்த புலவர் குழந்தை அவர்களின் சொந்த ஊர், கொங்குநாட்டுக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஓலவலசு என்னும் சிற்றூராகும். இவ்வூர் கோவை மாவட்டத்து, ஈரோடு வட்டத்தில், ஈரோடு – பழைய கோட்டை வழியில், ஈரோட்டிற்குத் தெற்கே பதினறுவது கல்லில் (26 கி.மீ) உள்ளது. 'ஓலவலசுப் பண்ணையக்காரர்' என்னும் பழம் பெருங்குடியில், 1—7—1906 இல் இவர் பிறந்தார். இவர்தம் தந்தையார் - முத்துச்சாமிக் கவுண்டர்; தாயார்-சின்னம்மையார். இவர் தம் பெற்றோர்க்கு ஒரே மைந்தராவர்.



புலவர் குழந்தை

நான்கைந்து திண்ணைப் பள்ளிகளில் நான்கைந்தாண்டுகள் இடையிடையே விட்டுவிட்டுப் படித்த இவர்தம் பள்ளிப்படிப்புக் காலம் ஆகக்கூடி எட்டு மாதங்களேயாம். இவர் பத்தாண்டுப் பருவத்திலேயே கவிபாடும் ஆற்றலை இயற்கையாகப் பெற்றிருந்தார். அவ்விளம் பருவத்திலேயே, ஒரு பாட்டைப் பிறர் பாடக்கேட்டால் உடனே இவர் அப்பாட்டின் ஓசையில் புதுப்பாட்டொன்றினைப் பாடிவிடுவர். எந்நேரமும் ஏதேனும் ஒரு பாட்டை எழுதிக்கொண்டிருப்பதே இவருடைய பொழுது போக்காகவும் விளையாட்டாகவும் இருந்தது.

இவர் முதன்முதலாகப் பாடியவை இசைப்பாடல்களேயாம். இவர்தம் கல்லாக் கவித்திறத்தினையும், கவிகளின் சிறப்பினையும் கண்டு வியந்த அறிஞர் பெருமக்கள் சிலர், தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் படிக்குமாறு தூண்டி இவரை ஊக்குவித்தனர். அக்காலத்தில் ஓலவலசிலோ, அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலோ தமிழ்ப்புலவர் எவருமின்மையால், இவர் ஆசிரியர் உதவியின்றித் தாமாகவே முயன்று படித்துத் தமிழில் சிறந்த புலமையுடையவரானார். மேலும்,

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – ஆசிரியர் அறிமுகம்

வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



தாமாகவே படித்து 1934 ஆம் ஆண்டில், சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் பட்டம் பெற்றுச் சிறந்தார்.

இவர் 1924 முதல் 1962 முடிய 39 ஆண்டுக்காலம் ஆசிரியத் தொண்டாற்றியுள்ளார். 1941 முதல் 1962 முடிய, பவானி கழக உயர் நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

ஓலவலசில் இவருக்கு முன் படித்தவர் எவருமில்லை. அவ்வூரார் எவருக்கும் கையொப்பமிடவும் தெரியாது. இளமைப் பருவத்திலேயே பொதுத்தொண்டில் பேரார்வங் கொண்டிருந்த இவர், தாமாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் படித்துக் கொண்டிருந்த பொழுது, தம் ஊரிலிருந்த தம்மை யொத்த இளைஞர்களுக்குக் கல்வி கற்பித்து, அவர்களைக்கொண்டு வயதாற் பெரியவர்களுக்குக் கையெழுத்துப் போடப் பழக்கி, அதன்மூலம் அவ்வூரின் தற்குறித்தனத்தைப் போக்கினார். அதுபோழ்து, இவரைவிட இரண்டு மூன்று மடங்கு வயதில் மூத்த பலர் இவரிடம் கல்வி கற்றுக்கொண்டனர்.

யாப்பிலக்கணம் படிக்கத் தொடங்கு முன்னரே 1918 இல், இவர் பாடிய 'கன்னியம்மன் சிந்து' என்னும் சிறு நூல் அச்சாகியுள்ளது. இவர் பாடிய அச்சாகாத பாடல்களும் நூல்களும் பல. அவற்றுள் 'ஆடிவேட்டை', 'நல்லதம்பிச் சர்க்கரை தாலாட்டு' என்பன, அறிஞர்களால் பாராட்டப் பெற்றவை. 1926-27இல், வெள்ள கோவில், 'விரக்குமாரசாமி இரதோற்சவச்சிந்து' 'வீரக்குமாரசாமி காவடிச்சிந்து'' 'வெள்ள கோவில் வழிநடைச்சிந்து' ஆகிய நூல்கள் அச்சாயின. யாப்பிலக்கணம் அறியாமுன்னர் இவர் பாடிய அப் பாடல்கள் யாப்பமைதி யுடையனவாய் உள்ளன.

காட்டு :

செங்கரும்பை வாங்கித்
திருக்கையிலே தாங்கி
அங்கசவே ளோட
அவன்செயலைப் பாட
மங்கையர்கள் கூடி
மணூளருட னுடித்
தெங்கிள நீ ருண்பாரடி
என் தங்கமே
தெருவில் திரிவாரடி.

—கன்னியம்மன் சிந்து



இவர் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பயின்றுகொண்டிருந்த போழ்தும் பாக்கள் இயற்றுவதைக் கைவிடவில்லை. அதனையும் ஒருங்கு செய்தே வந்தார். அதாவது, படிக்கும் செய்யுட்களைப் போன்ற புதுச் செய்யுட்கள் செய்துவருவார்.

1935 முதலாக இவர் பள்ளிப் பாட நூல்கள் எழுதிவந்துள்ளார். இவர் எழுதிய பள்ளி இலக்கண நூல்கள் (3–11 வகுப்பு) தனிச் சிறப்புடையவை.

இவர் இது காறும் எழுதியுள்ள நூல்களாவன :

**செய்யுள் நூல்கள்** . 1. இராவண காவியம், 2. அரசியலரங்கம், 3. நெருஞ்சிப்பழம், 4. காமஞ்சரி, 5. உலகப் பெரியோன் கென்னடி, 6. திருநணச் சிலேடை வெண்பா, 7. புலவர் குழந்தை பாடல்.

**உரை நூல்கள்** : 8. திருக்குறள் - குழந்தையுரை, 9. தொல்காப்பியப் பொருளதிகாரம் - குழந்தையுரை, 10. நீதிக்களஞ்சியம் உரை.

**இலக்கண நூல்கள்** : 11. யாப்பதிகாரம், 12. தொடையதிகாரம், 13. இன்னூல் (சூத்திரம்)

**உரைநடை நூல்கள்** : 14. தொல்காப்பியர் காலத் தமிழர், 15. திருக்குறளும் பரிமேலழகரும், 16. பூவாமுல்லை, (இம்மூன்றும் ஆராய்ச்சி நூல்கள்) 17. கொங்குநாடு, 18. தமிழக வரலாறு, 19. தமிழ்வாழ்க (நாடகம்), 20. தீரன் சின்னமலை (விடுதலை வீரன் வரலாறு), 21. கொங்கு நாடும் தமிழும். 22. கொங்குக்குலமணிகள், 23. அருந்தமிழ் விருந்து, 24. அருந்தமிழ் அமிழ்து, 25. சங்கத் தமிழ்ச் செல்வம், 26. ஒன்றே குலம், 27. அண்ணல் காந்தி, 28. தமிழெழுத்துச் சீர்திருத்தம். 29. தீரன் சின்னமலை நாடகம் (இன்னும் அச்சாகவில்லை.)

1925-இல், தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கம் தொடங்கினதும் இவர் அவ்வியக்கத்தில் சேர்ந்து, பெரியாரின் அணுக்கத் தொண்டரானார். அன்று முதல், சுயமரியாதை இயக்கம், அதன் மறுபதிப்பான திராவிட கழகம், அதன் மறுமலர்ச்சியான திராவிட முன்னேற்றக் கழகம் எனத்தொடர்ந்து அதே கட்சியில் - ஒரே கட்சியில் - இருந்து வருகிறார். சுயமரியாதைக் கொள்கையினின்றும் இவர் அணுவும் அசையாதவர் ; முறுகிய கட்சிப்பற்றுடையவர் ; பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதனையும்செய்யாதவர். பள்ளி ஆசிரியராக இருந்துகொண்டே அத்தொழிலுக்குச் சிறிதும் இடையூறில்லாமல்,

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – ஆசிரியர் அறிமுகம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன



'கருப்புச் சட்டைக்காரர்' என்று ஊரார் கூறுமள 'பெரியார் சீடர், வுக்குக் கட்சித் தொண்டாற்றி வந்தார்; இன்னும் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறார்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் "முத்தாரம்" எனும் திங்கள் வெளியீட்டில் வெளிவந்த இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பான "பூவாமுல்லை" என்னும் நூலுக்குச் "சுதேசமித்திரன்" நாளிதழில் மதிப்புரை எழுதிய ஓரன்பர், 'இந்நூலாசிரியரான புலவர் குழந்தை ஒரு சுயமரியாதைக்காரர்' என்று குறித்திருப்பதே இவரது சுயமரியாதைத் தொண்டுக்குத் தக்க சான்றாகும். இவரது சுயமரியாதை உணர்ச்சிப் பிழம்பே இராவண காவியம் எனலாம்.

இவர் சமய நம்பிக்கை இல்லாதவர். வெள்ளகோவில் தீத்தாம்பாளையத்தில், 1930இல், "ஞான சூரியன்" ஆசிரியரான சாமி சிவானந்த சரசுவதி என்பாருடன், 'கடவுள் இல்லை' என நான்கு நாள் நடத்திய சொற்போரில் இவர் வாகை சூடினர்.

1938 இலும், 1948 இலும் நடைபெற்ற இந்தியெதிர்ப்புப் போராட்டங்களில் பங்குகொண்டு, பாடல்களாலும், சொற்பொழிவுகளாலும் பெருந்தொண்டாற்றினர். இந்தி ஆட்சி மொழியானால் தமிழுக்கும் தமிழர்க்கும் உண்டாகும் கேட்டினை விளக்கி, 'இந்தி ஆட்சி மொழி ஆனால்' என்னும் ஆராய்ச்சி நூலினை எழுதி அச்சிட்டு, 1965 இல் கோவையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் வழங்கினர். 'அரசியலரங்கம்' என்னும் நூலில், 'ஆட்சி மொழி' என்னும் தலைப்பில், இந்தி தேவையில்லை என்பதை முடிவுகட்டியுள்ளார்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற இயக்கத்தின் போது, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற அச்சுக்கட்டைகள் செய்து கொடுத்து, ஒரு துணி வரிகரைக் கொண்டு வேட்டி, துண்டு, சேலைக் கரைகளில் அச்சிட்டுத் தமிழ்நாடு முழுவதும் பரப்பிய பெருமை இவரையே சாரும்.

வேளாள இனத்தினரிடையேயுள்ள பல பிரிவினரையும் ஒன்று சேர்க்கும் பொருட்டும், அவ்வின இளைஞர்களை முன்னேற்றப் பாதையில் செலுத்தும் பொருட்டும், 1946 முதல் 1950 வரை, "வேளாளன்" என்னும் மாத இதழை நடத்தினர். விதவை மணம், கலப்பு மணம், சீர்திருத்த மணம் முதலியன செய்யும் அளவுக்கு அவ்வினத்தினரிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கியது 'வேளாளன்.' 'வேளாளனில்' தொடர்ந்து இவரெழுதிய கட்டுரைகள் அவ்வின இளைஞர்களைப் புத்துணர்ச்சி பெறுமாறு செய்தது.



வேளாள சமூகத் தலைவரான திரு. வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்கள் தலைமையில், தருமபுரி மாவட்டம் அரூரில் நடந்த வேளாள மாநாட்டில், விதவை மணத் தீர்மானங்கொண்டு வந்து ஒருமனமாக நிறைவேற்றி, அதன்படி நூற்றுக்கணக்கான விதவை மணங்கள் செய்துவைத்தமை இவர் சமூகத் தொண்டுக்குச் சிறந்த சான்றாகும்.

பகவத்சிங் முதலிய விடுதலை வீரர்கள் கொள்கையில் இவர் மிகுந்த பற்றுடையராய் இருந்தனர். 1931இல் ஆங்கில ஆட்சியாளர் அவர்களைத் தூக்கிக் கொன்றபோது இவர் உணர்ச்சிமிக்க பாடல்கள் பாடி வருந்தினர். (அப்பாடல்கள், 'புலவர் குழந்தை பாடல்' என்னும் நூலில் உள்ளன.)

1948 இல், சென்னையில் நடந்த திருக்குறள் மாநாட்டில், பகுத்தறிவுக் கேற்ப - தமிழ் மரபு பிறழாமல் - திருக்குறளுக்கு ஓர் உரை எழுதப் பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குழுவில்-நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய ஐவருள் புலவர் குழந்தையும் ஒருவராவர். இவரே தனித்து அப்பணியை மேற்கொண்டு, திருக்குறளுக்குப் பகுத்தறிவுக் கேற்பச் சிறந்ததோர் உரையெழுதி வெளியிட்டனர். 'திருக்குறள்-குழந்தையுரை' என்னும் அவ்வுரையை இவர் இருபத்தைந்து நாட்களில் எழுதி முடித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அறிஞர் அண்ணா அவர்கள் 'விடுதலை' ஆசிரியராக ஈரோட்டில் இருந்தபோது, அண்ணா அவர்களோடு இவர் நெருங்கிப் பழகி வந்தனர். அப்போதெல்லாம் அண்ணா அவர்கள் இவரைப் பேர் சொல்லாமல் 'புலவர்' என்றே அழைத்து வந்தனர். பிறரும் அவ்வாறே அழைத்து வந்தமையால், 'புலவர்' என்பது இவரது இயற்பெயரே போலாகி விட்டது. இறுதிவரை அண்ணா அவர்கள் இவரை அவ்வாறேதான் அழைத்து வந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் இவர்பால் மிக்க அன்பும் மதிப்பும் உடையவராக இருந்துவந்தனர். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களும் அவ்வாறே இவர்பால் அன்பும் மதிப்பும் உடையவராக இருந்து வருகின்றனர். அவ்வாறே மற்றத் திராவிட கழக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், தோழர்களும் இவர்பால் மிக்க அன்பும் மதிப்பும் உடையவர்களாக இருந்து வருகின்றனர். தமிழ்மக்கள் எல்லோருமே புலவர் குழந்தையைத் தங்கள் தமிழ்க்குழந்தை எனக் கொண்டுள்ளனர் என்பது மிகை யாகாது.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – ஆசிரியர் அறிமுகம்

வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



புலவர் குழந்தை அவர்கள் பெருங்கவிஞர் மட்டுமல்லர். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்; கேட்போர் வேட்கும் வண்ணம் பேசும் பெரும் பேச்சாளர். இவருடைய எழுத்தும் பேச்சும் உண்மையும் உறுதியும் அஞ்சாமையும் ஆய்வும் செறிந்த புரட்சிக்கனல் கக்கும் இயல்புடையவை எனல் மிகையாகாது. இவருடைய செய்யுள் நடையும் உரைநடையும் எளிய இனிய தனிச் செந்தமிழில் அமைந்தவையாகும். இவர் நூல்களெல்லாம் தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கந்தரும் வகையிலேயே அமைந்துள்ளன.

‘விருத்தம் எனும் ஒண்பாவில் உயர்கம்பன்’ என இதுகாறும் போற்றப்பட்டு வந்த புகழுரையைப் புலவர் குழந்தை அவர்களின் ‘இராவண காவியம்’ பொய்யாக்கி விட்டது. சிந்துப் பாடல்களாலான ‘அரசியலரங்கம்’ என்னும் நூல், வரலாறு என அறியாமலே இலக்கியச் சுவைபடத் தமிழக வரலாற்றினை அறிந்தின்புறும் வகையில் அமைந்துள்ளது. ‘காமஞ்சரி’ என்னும் செய்யுள் நாடக நூல், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் ‘மனோன்மணீயத்’திற்குப் பின், அத்தகைய நாடகநூல் இயற்றப்படவில்லை என்னும் பெருங்குறையினைப் போக்கி, அதனைவிடச் சிறந்த நூல் என்னும் புகழுடன் இயன்றுள்ளது. ‘நெருஞ்சிப் பழம்’ எனும் நூல், தமிழில் இதுகாறும் வெளிவராத கற்பனைக் கருவூலமான காதற்பழமாகும்.

புலவர் குழந்தை அவர்களின் புலமைத்திறன், செய்யுளியற்றுவதுடன் மட்டும் அமைந்துவிடவில்லை; சிறந்த உரை எழுதுவதிலும் வல்லுநர் என்பதனை இவர்தம் ‘திருக்குறள்-குழந்தையுரை’, ‘தொல்காப்பியப் பொருளதிகார உரை’, ‘நீதிக்களஞ்சியம் உரை’ முதலிய உரைகளைக்கண்ணுறுவோர் எளிதில் அறியலாம். இவரது வரலாற்றுப் புலமைக்குக் ‘கொங்குநாடு’ என்னும் நூல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதற்குமுன் இத்தகைய நூல் வெளிவரவில்லை.

புலவர் குழந்தை அவர்கள் தம் தாய்மொழியிடத்துக் கொண்டுள்ள அளவுகடந்த பற்றுக்கும், தமிழ்மொழி யாதொரு குறைபாடுமின்றி வளமுற்றுத் திகழவேண்டும் என்னும் பேரார்வத்திற்கும் பெருநோக்கிற்கும் சான்றாகத் திகழ்கிறது ‘தமிழெழுத்துச் சீர்திருத்தம்’ என்னும் ஆராய்ச்சி நூல். ‘தொல்காப்பியர் காலத் தமிழர்’, ‘பூவாமுல்லை’, ‘திருக்குறளும் பரிமேலழகரும்’ என்னும் நூல்கள் புலவரின் ஆராய்ச்சித் திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

‘நாங்களும் கவி எழுதுகிறோம்’ என ஒருசிலர், யாப்பமைதியற்ற தப்புந்தவறுமான கவிகள் எழுதி அச்சிட்டு நூல்வடிவில் வெளியிட்டும், செய்தித்தாள்களில் வெளியிட்டும் தமிழ்ச் செய்யுள் மரபைச்




சிதைத்து வருவது கண்டு இவர் பெரிதும் வருந்துவர். அத்தகைய கவிகள் தமிழ்மொழியைச் சீர்குலைக்கும் என்பதை அக்கவிஞர்களைக் காணும்போது எடுத்துக்கூறத் தயங்கார்; தப்புந்தவறுமான கவிகளை நன்கு திருத்தித் தருவர். மோனையும் எதுகையும் நன்கு அமையுமாறுஉரிய ஓசைநயங்குன்றாமல் செய்யுள் செய்ய வேண்டும் என்பது இவரது உறுதியான கொள்கையாகும். கவியரங்கங்கட்குத் தலைமைதாங்கும்போது இக்கருத்தை வற்புறுத்திக்கூற இவர் சிறிதும் பின்வாங்குவது கிடையாது. இவர் தம் “யாப்பதிகாரம்” என்னும் நூலிலுள்ள ‘கவியரங்கம்’ என்னும் பகுதியும், “தொடையதிகாரம்” என்னும் நூலும் இவரது இவ்வுளக்கோளைத் தெள்ளிதின் விளக்கும் சான்றுகளாக மிளிர்கின்றன. ‘தொடையதிகாரம்’ என்னும் நூலில்-கும்மி, ஒப்பாரி, உடுக்கைப் பாட்டு முதலிய எல்லாவகையான சிந்துகளுக்கும் இலக்கணம் எழுதி, இளங்கவிஞர்களுக்கு இவர் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றனர். இன்று தமிழகத்தில் செய்யுள் இலக்கணத்திற்குச் சிறிய சான்றாக விளங்குகின்றனர் புலவர் குழந்தை அவர்கள்.

தமிழ்ச் செய்யுள் மரபு சிதையாமல் இருக்கவேண்டும் என்னும் நன்னோக்குடைய இவர், யார் எத்தகைய தப்புந்தவறுமான-பாட்டல்லாப் பாட்டுக்கள் எழுதிக்கொண்டு வந்தாலும் அவர்களை அன்போடு வரவேற்று, அக்கவிகளைத் திருத்தமுறத் திருத்தித் தருவதை இவர் தம் தமிழ்த் தொண்டாகக் கொண்டுள்ளார்.

இராமலிங்க வள்ளலாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அவ்வடிகளாரின் ‘திருவருட்பா’ என்னும் நூலின் புதிய பதிப்பொன்று வெளியிட முனைந்துள்ள, வடலூர் வள்ளலார் மடத்தைச் சார்ந்த ஒரு பெரியவர், அப்பாக்களுட் பல பெயர் தெரியாமலும், ஒழுங்காகச் சீர்பிரிக்கப்படாமலும், யாப்பமைதி யில்லாதவைபோலப் பதிக்கப்பட்டும், தவறாக எண்ணிடப்பட்டும் உள்ளமையால், அப்பாக்களைச் சீர்செய்து செல்ல 29-8-71 அன்று புலவர் குழந்தை அவர்களிடம் வந்தபோது, இவர் அப்பெரியவரை அன்புடன் வரவேற்று, அப்பாக்களுக்குரிய பெயர்களைக் குறித்து, ஒழுங்கான முறையில் சீர்களைப் பிரித்து யாப்பமைதியுறத் திருத்தம் செய்து, சரியான எண்ணிட்டுக் கொடுத்தனர். இவ்வாறே, பலர் தாம் எழுதிய பாக்களை இவர்பால் கொண்டுவந்து காட்டித் திருத்திக்கொள்வதும், ஐயப்பாடுகளை நீக்கிக்கொள்வதும் எப்போதும் நடைபெறும் செயல்களாக உள்ளன.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – ஆசிரியர் அறிமுகம்

வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



62

தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களைக் கலப்பதையும், தனித் தமிழினத் தமிழின் இனிமைப் பண்புக்கு மாறாக மிகக் கடுஞ்சொல் ஆக்குவதையும் இவர் விரும்புவதில்லை.

காங்கிரசு ஆட்சியாளரால் தடை செய்யப்பட்ட இவர்தம் 'இராவண காவியம்' தமிழக அரசினால், தமிழ்வாழத் தாம் வாழும் தமிழக முதல்வர் டாக்டர், கலைஞர் தமிழவேள் கருணாநிதி அவர்களால் 17-5-71 இல் தடை நீக்கப்பட்டது. அது கண்ட தமிழகமே அகமிக மகிழ்ந்து தமிழக அரசை, டாக்டர், கலைஞர் தமிழவேள் அவர்களை மனமார வாழ்த்தியது; புலவர் குழந்தையை உவந்து பாராட்டியது. 23—5—71 அன்று, பவானிக் குமாரபாளையம் பகுத்தறிவுக் கழகத்தார், பொதுக்கூட்டம் போட்டுப் புலவரைப் பாராட்டினர். 6—6—71 இல் புதுவையில் நடந்த 'இராவணன் விழா'வில் புலவரைப் பாராட்டி, புதுவை முதல்வர் மாண்புமிகு, பரூக் மரைக்காயர் அவர்கள் பொன்னாடை போர்த்துப் பெருமைப் படுத்தினர். 4—9—71 இல், விழுப்புரம் பகுத்தறிவாளர் கழகத்தார் பாராட்டுக் கூட்டம் நடத்திப் பாராட்டிதழ் படித்து வழங்கித் தந்தை பெரியார் அவர்களால் புலவர்க்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தனர்.

பவானி கலைஞர் கருணாநிதி மக்கள் பணி மன்றத்தினர் 6-10-71 அன்று பவானியில் பாராட்டுக் கூட்டம் நடத்தி, தந்தை பெரியார் அவர்களால் புலவர் குழந்தை அவர்கட்குப் பொன்னாடை போர்த்துப் பெருமைப்படுத்தினர். தந்தை பெரியார் அவர்கள், தமிழ்ப் புலவர்களெல்லாம் தமிழரை இழிவுபடுத்தும் புராணக் கருத்துக்களையே பாடி வந்தனர். அதற்கு மாறாக இராவண காவியத்தைச் செய்து தமிழரின் இழிவைப் போக்கிய புலவர் குழந்தை அவர்களைப் பாராட்டுகிறேன். அத்தகைய இராவண காவியத்தைத் தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும். இக்காவியத்தைப் பள்ளிகளில் பாடமாக வைக்கவேண்டும் என்று பேசினார்.

புலவர் குழந்தை இப்போது பவானியையே தம் சொந்த ஊராகக் கொண்டுள்ளார். பவானியில் புலவர்க்குச் சொந்த வீடும் நிலபுலன்களும் உள்ளன. இவர் ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெற்றனரேயன்றித் தமிழ் வளர்ச்சித் தொண்டாற்றுவதினின்றும்-தமிழின உணர்ச்சித் தொண்டாற்றுவதினின்றும் ஓய்வு பெற்றாரிலர். எப்போதும் படித்துக்கொண்டும், பாட்டும் நூலும் கட்டுரையும் எழுதிக்கொண்டு மிருப்பதையே இவர் தம் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார். கூடுதுறை போகும் வழியிலுள்ள புலவர் வீட்டு வழியே செல்வோர், இவர் எப்போதும் எழுதிக்கொண்டிருப்பதைக் கண்டு வியப்பர்.

63

தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பன இவர்தம் மூந்நாடியாகும். தமிழுக்கு, தமிழர்க்கு, தமிழ் மரபுக்கு ஒவ்வாதவற்றை–தகாதவற்றை–வன்மையாகக் கண்டிப்பதிலும், தக்கவற்றை ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறுவதிலும் இவர் மிக்க நெஞ்சுரமுடையவர்; எதையும் இனிய சொற்களால் வெளிப்படையாக எடுத்துரைக்கும் இயல்புடையவர்.

புலவர் குழந்தை ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாகக் கொண்டவர். ஒழுக்கக் கேடான எதையும் செய்ய அஞ்சுபவர். இவர் ஒரு புரட்சிப் புலவரே எனினும், அமைதியும் அடக்கமும் உடையவர்; ஆடம்பர மற்ற எளிய வாழ்க்கையுடையவர்.

இவர் பழகுதற்கு மிகவும் இனியர்; கடமை தவறாதவர்; எதிர்க் கட்சியினராலும் – மாற்றுக்கொள்கையினராலும் – நன்கு மதிக்கத்தக்க நேர்மையுடையவர். காங்கிரசுக் கட்சியாட்சியில், கருப்புச்சட்டைக் காரராகிய இவர், இருபத்திரண்டு ஆண்டுகள் பவானி நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியிலேயே பணியாற்றி ஓய்வு பெற்றதொன்றே இவர்தம் நேர்மைக்கும், கடமையுணர்ச்சிக்கும் போதிய சான்றாகும்.

புலவர் குழந்தை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார், கல்வியறிவு வாய்க்கப் பெறாதவரே யொழியப் பொது அறிவு நிரம்பப் பெற்ற தன்மானக் கொள்கையுடையவர்; தம் கணவரின் கொள்கைக் கேற்ப இனிது இல்லறம் நடத்தும் கடப்பாடுடையவர். இங்ஙனம் மனைத்தக்க மாண்புடைய ஒருவரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றமையான் புலவர் குழந்தையின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாக மிளிர்கின்றது.

புலவர் குழந்தையும் துணைவியாரும்

இங்ஙனம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவராகிய புலவர் குழந்தை அவர்கட்குச் சமத்துவம், சமரசம் என்னும் இரு பெண் மக்கள் உள்ளனர். இவர்களுள், சமத்துவம் B.Sc. (Ag.) பட்டம் பெற்றவர்; பதினேழாண்டுக் காலம், கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சித் துறையில் பணியாற்றினார். இவர்தம் கணவர், திரு. அ. தங்கவேல் B.A. அவர்கள், கோவை பஞ்சாப் நேஷனல் வங்கியில் பணியாற்றி வந்தார். இப்போது இருவரும் வேலையை

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – கதைச்சுருக்கம்

வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



விட்டுவிட்டுத் நம் சொந்த ஊரான சேலம் கருப்பூரில் இருந்து வருகிறார்கள். திரு. தங்கவேல், கருப்பூர் நகரத் தி.மு.க. தலைவராகத் தொண்டாற்றிவருகிறார். இவர்கட்குச் செல்வக்குமார், மோகன், ஆனந்து என்னும் ஆண்மக்கள் மூவர் உள்ளனர்.

இளையமகள் சமரசம் B.A. B.T. அவர்கள், பவானி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை ஆகப் பணியாற்றி வருகிறார். இவர்தம் கணவர், திரு. சி. கந்தசாமி B.A., B.T. அவர்கள், பவானியை அடுத்த ஆப்பக்கூடல் சக்தி சர்க்கரை ஆலையினரால் நடத்தப்படும் சக்தி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்து வருகிறார். இவர்கட்கு அமுது என்னும் மகளும், எழில் என்னும் மகனும் உள்ளனர். இவர்கள் புலவருக்கு உதவியாகப் புலவர் வீட்டிலேயே இருந்து வருகிறார்கள். புலவர் குழந்தை அவர்கள், மக்கள், மருமக்கள், பேர்த்தி பேரர்களுடன் இன்புற்று அமைதியுடன் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார்.

# இராவண காவியக் கதைச் சுருக்கம்

மிகப் பழங்காலத்தே தமிழ்நாடு இன்றுள்ள எல்லைக்குட்பட்டிருக்கவில்லை; வடக்கில் பனிமலைகாறும் பரவியிருந்தது; அயல்நாடர் குடியேற்றத்தால் பின்னர் விந்தமலையை வடக்கெல்லையாகக் கொண்டது. தென்கடல் நிலமாக இருந்தது. அது, இன்றுள்ள குமரிமுனைக்குத் தெற்கில் ஆயிரங் கல்லுக்குமேல் அகன்றிருந்தது. கிழக்கிலும் வங்கக்கடலும், சாவக முதலிய தீவுகளும் ஒரே நிலப்பரப்பாயிருந்தது. தென்னிலத்தில் குமரிமலை, பன்மலை முதலிய மலைகள் ஓங்கியுயர்ந்திருந்தன. குமரிமலையில் குமரியாறும், பன்மலையில் பஃறுளியாறும் தோன்றி அந்நிலத்தை வளஞ்செய்தன.


குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப்பட்ட நிலம் பெருவளநாடு எனவும், பஃறுளிக்கும் தென்கடலுக்கும் இடைப்பட்ட நிலம் தென்பாலிநாடு எனவும் வழங்கின; பஃறுளியாற்றங்கரையில் இவ்விரு நாடுகளின் தலைநகரமான மதுரை இருந்தது. குமரிக்கும் விந்தத்திற்கும் இடைப்பட்ட நிலம் திராவிடம் என வழங்கிற்று. அது வேளிர் என்னும் சிற்றரசர் பலரால் ஆளப்பட்டு வந்தது. திராவிடத்தின் மேற்கில் சேரநாடு இருந்தது. திராவிடத்தின் கிழக்கில் சோழநாடு இருந்தது. இவ் வைவகைப்பட்ட தமிழகம்— குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலமாக மக்கட்கு வேண்டிய எல்லாச் செல்வமும் பொருந்தியிருந்தது.

நானில மக்களும் தங்களுக்குள் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு அவன் ஆணைக்குட்பட்டு வாழ்ந்து வந்தனர். பின்னர்த் தமிழக முழுமைக்கும் ஒரு மாபெருந் தலைவனை ஏற்படுத்தினர். அவன் தமிழகத்தின் நடுவில் - இன்றுள்ள இலங்கையின் தென்மேற்கில் இருந்த ஒரு தொன்னகரில் இருந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன். அப்பண்டையோன் மரபில் வந்தவரே பாண்டியராவர். அம்மாபெருந் தலைவன் வழிவந்த ஒருவன் தன் மகனைத் தென்னாட்டுக்கும், மற்றிரு தமிழ்த் தலைமக்களைச் சோழநாடு, சேரநாடுகட்கும் தலைவராக்கினான். அம்மூவர் வழிவந்தோரே பாண்டிய சோழ சேரராவர்.

கி. மு. 31 திருவள்ளுவர் ஆண்டாகும். கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன் தென்கடல் பொங்கித் தென்பாலியையும், கிழக்கு நாட்டின் பெரும்பகுதியையும் வாய்க்கொண்டது; பின், கி. மு. 2500இல் ஒருமுறை கடல் பொங்கிப் பெருவளத்தின் பெரும்பகுதியை

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – கதைச்சுருக்கம்

வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



66

யும், கிழக்கு நாட்டையும் விழுங்கிற்று. பின் கி. மு. 700 இல் ஒருமுறை கடல் பெருகித் திராவிடத்தின் ஒரு பகுதியையும் உண்டேப்பமிட்டது.

இரண்டாங் கடல்கோளின் பின்னர் இலங்கை உண்டானது. இலங்கை நாட்டின் நடுவில் இருந்த முக்கூடல் மலைமீது இலங்கை நகர் இருந்தது. மூன்றாங் கடல்கோளுக்கு முன் இலங்கையிலிருந்து தமிழகத்தை யாண்டுவந்த தமிழரின் மாபெருந் தலைவர் வழிவந்த வச்சிரவாவுவின் மனைவியான **கேகசி** என்பாள் **இராவணன்**, **கும்பகன்னன்**, **பீடணன்** என்னும் மூன்று ஆண்மக்களையும், **காமவல்லி** என்னும் ஒரு பெண் மகளையும் பெற்றனள். மூத்தவனான இராவணன் முடிபுனைந்து தமிழகத்தை ஆண்டு வந்தனன்.

மலைவளங்காணச் சென்ற இராவணனும், திராவிடத்தைச்சார்ந்த முதிரை நகரிலிருந்து முல்லைநாட்டை யாண்டுவந்த மாயோன் மகள் வண்டார்குழலியும் எதிர்ப்பட்டுக் காதல்கொண்டு மணம் புரிந்து இல்லறம் நடத்தி வந்தனர். வண்டார்குழலி சேயோன் என்னும் செம்மலைப் பெற்றனள்.

தமிழகத்தின் வடக்கெல்லையான விந்தச்சாரல் பல சிறு நாடுகளாகப் பாகுபட்டிருந்தது. வடநாட்டில் ஆரியர்என்னும் ஓரினத்தினர் வாழ்ந்து வந்தனர். அவர்களில் கல்வி யறிவுள்ள முதியோர் சிலர், இராவணன் தோன்றுவதற்கு நெடுநாள் முன்னரே துறவுக் கோலத்துடன் தமிழகம் போந்தனர். தமிழ்மக்கள் அன்னாரை அன்புடன் வரவேற்று ஊனுடை யுதவிப் போற்றி வந்தனர். அவர் தமிழ் கற்றும், தமிழரிடம் நெருங்கிப் பழகியும் வந்தனர். இவ்வாறே பின்னரும் பின்னரும் பலர் வந்தனர். நாளடைவில் அவர் தமிழகம் முழுதும் போந்து, தமிழந்தணருடனும், புலவருடனும் நெருங்கிப் பழகி அரசர் உறவையும் பெற்றனர். நாளாகவாக ஆரிய இளைஞரும் வந்து, தமிழ்ச் செல்வ இளைஞரிடம் தோழமை செய்யும் பார்ப்பன வேலையும் சிலர் பார்த்து வந்தனர்.

நாளடைவில் பலர் பெண்டு பிள்ளைகளுடன் குடியேறி விந்தக் காடுகளில் இலைக்குடில்கள் அமைத்து வாழ்ந்து வந்தனர். அவர் வேள்வி மூலம் உயிர்களைக் கொன்றுண்ணத் தொடங்கினர். தமிழ் மக்கள் அதனைத் தடுத்தனர். அவர் கேட்கவில்லை. இருபாலார்க்கும் போருண்டானது. அம்மக்கட்போர் தமிழாரிய மன்னர் போரானது. முடிவில் வடவரசர் தோற்றனர். ஆரிய முனிவர்கள் அஞ்சினவர் போல நடித்துப் பல தமிழரசர்களை வஞ்சித்துக்கொன்றனர். நூற்றுக் கணக்கான தமிழர் கோட்டைகளைத் தீயிட்டெரித்தனர்.

67

விந்தச்சாரலி லிருந்த இடைவள நாட்டை யாண்டு வந்த தாடகை யென்னும் தமிழரசி இராவணனது துணையை வேண்டினள். அவன் சுவாகு என்னும் படைத்தலைவனைப் பெரும் படையுடன் அனுப்பினான். சுவாகு இடைவளஞ் சென்று ஆரியப் புலைவேள்வியை யகற்றிக் காத்துவந்தான். அதனால், கோசிகன் என்னும் ஆரிய முனிவன் வேள்விசெய்ய முடியாது மனமுடைந்து சென்றனன்.

வடநாட்டில் சரயுவாற்றங் கரையில் உள்ள அயோத்தியில் தசரதன் என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் கோசலை, சுமத்திரை என்னும் இரு மனைவியருடனும், பல காதல் மகளிருடனும் களித்து வந்தான்; தனது தோள்வலியால் பல நாடுகளை வென்று கோசலம் என்னும் நாட்டை நிறுவிப் பேரரசனானான். பின் தன் தகுதிக்கேற்பப் பேரரசனான கேகயன் மகள் கைகேசியைக் கேட்டான். அவன் மறுக்கவே, தனது நாட்டைக் கைகேசிக்குப் பரிசமாகக் கொடுத்து அவளை மணந்தனன்.

கிழப்பருவமுற்றும் பிள்ளையில்லாது வருந்திய தசரதன், குலகுரு வசிட்டர் சொற்படி கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு குதிரை வேள்வி செய்தனன்; ஓர் ஆண் குதிரை படையுடன் ஓராண்டில் நாடு சுற்றி மீண்டது. முனிவர் வேள்வி தொடங்கினர். அவ்வேள்விக் குதிரையைக் கோசலை வாள் கொண்டு மூன்று வெட்டில் வெட்டி வீழ்த்தினாள். கோசலை தன் கணவனைத் தழுவுவதுபோல் வெட்டுண்ட அவ்வாண் குதிரையைத் தழுவி அவ்விரவைக் கழித்தனள். சடங்குகள் முடிந்த பின் பல பகல் குதிரை, ஆடு, மாடு, ஆமை, பாம்பு, பறவை முதலிய பன்னூற்றுக் கணக்கான உயிர்களைக் கொன்றுதின்று சோமக் கள்ளுண்டு இன்புற்றனர். தசரதன் கலைக்கோடர் முதலிய வேள்வி யாசிரியர் மூவர்க்குங் கோசலை முதலிய மூன்று மனைவியரையும் காணிக்கையாகக் கொடுத்தனன். அவர்களுடன் கனிமொழி பேசிக் கூடிக்கலந்தின்புற்று மூவரும் கருப்பமுறவே அவர்கள் அம்மூவருக்கீடான பொருள் பெற்றுக்கொண்டு அம்மூவரையும் தசரதனிடம் ஒப்பித்துச் சென்றனர். கருப்ப முதிர்ந்து கோசலை இராமனையும், கைகேசி பரதனையும், சுமத்திரை இலக்குவ சத்துருக்கரையும் பெற்றனர். மக்கள் வளர்ந்து மணப்பருவ முற்றனர்.

மனமுடைந்து சென்ற கோசிகன் அயோத்தியை யடைந்து வேள்வித்துணையாக இராமலக்குவரை அழைத்துக்கொண்டு இடைவள நாட்டை யடைந்து ஒரு சோலையில் தங்கினர். அங்கே தனித்து வந்த தாடகையை முனிவன் சொற்படி இராமலக்குவர் கொன்றனர். அங்கிருந்து சென்று தன் குடிலையடைந்து முனிவன் வேள்வி தொடங்கினன்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – கதைச்சுருக்கம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்

சுவாகு இளவரசனை மாரீசனோடு சென்று வேள்வியைத் தடுத்தான். இராமன் சுவாகுவைக் கொன்றான். தன்னிலைமை யுணர்ந்த மாரீசன் ஆங்கு நின்றும் மீண்டனன். மூவரும் வேள்வி முடித்துத் தமிழகத்தை நீங்கினர்.

தூதரால் இதனையறிந்த இராவணன், விந்த நாட்டையாண்டு வந்த தனது தங்கை காமவல்லிக்குத் துணையாகப் பெரும்படையை அனுப்பினான். கரன் என்னும் படைத்தலைவன் அப்பெரும்படையை ஆங்காங்கு அமைத்துக் காத்து வந்தனன். காமவல்லியின் காப்பில் விந்தநங்கை புலைவேள்வியற்றுப் பொலிந்தனள்.

வேள்வி முடித்துச்சென்ற மூவரும் மிதிலையை யடைந்து சனகன் விருந்தினராக இருந்தனர். முனிவர் கட்டளைப்படி இராமன் சீதையின் திருமணத்திற் கேதுவான வில்லை வளைத்தொடித்தனன். சனகன் மகிழ்ந்து, தசரதன் முதலியோரை வரவழைத்துச் சீதையை இராமனுக்கும், ஊர்மிளையை லக்குவனுக்கும், தன் தம்பி குசத்துவசன் மகளிரான மாளவியைப் பரதனுக்கும், சுதகீர்த்தியைச் சத்துருக்கனுக்கும் மணஞ்செய்து கொடுத்தனன். தசரதன் சனகனிடம் விடைபெற்று மக்கள் மருமக்களுடன் அயோத்தியை யடைந்தனன்.

தசரதன், இராமன்மீதுள்ள பற்றினால் பரதனுக்குரிய நாட்டை இராமனுக்காக்க வெண்ணித் தந்திரமாகப் பரதனைச் சத்துருக்கனுடன் அவன் பாட்டனூருக் கனுப்பிவிட்டு இராமனை நாட்டு மக்களிடம் பழகச் செய்தனன். இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் சென்றன. தசரதன் அரசர்களையும் குடிமக்களையும் கலந்து ராமனுக்கு இளவரசுப் பட்டங் கட்ட முடிவு செய்தனன். இதை யறிந்த கைகேசியின் தோழியான மந்தரை என்பாள் அரசன் சூழ்ச்சியைக் கைகேசியிடம் கூறி முடிசூட்டு தலைத் தடுக்கும்படி வேண்டினாள். கைகேசி தசரதனிடம் முன்னர்ச் சம்பரனை வென்றதற்காகக் கொடுத்த இரு வரங்களில் ஒன்றால் பரதன் நாடாளவும் மற்றொன்றால் இராமன் பதினான்காண்டு காடாளவும் செய்ய வேண்டும் எனக்கேட்டாள். தசரதன் சூழ்ச்சி பலிக்கவில்லை. இராமன், சீதை, லக்குவன் மூவரும் தேரேறிக்காடு சென்றனர்.

சென்றவர், குகனென்னும் தோழனால் கங்கையைக் கடந்து வழி தெடுக ஆரிய முனிவர் வரவேற்று வழியனுப்பச் சென்று சித்திரகூட மலையை யடைந்திருந்தனர். தேரோட்டி வந்த சுமந்திரன் சென்று கூறவே தசரதன் ராமன் பிரிவால் உயிர் விட்டனன். பரதன் செய்தி கேட்டு வந்து தந்தையின் உடலை அடக்கம் செய்து சேனை சூழச் சித்திரகூடத்தை யடைந்து ராமனை நாடாள வரும்படி வேண்டினான். ராமன் நாடு பரதனுக்குரிய தென்பதைக் கூற, பரதன் நான் அதை உனக்குத் தந்தனன் ஏற்றருள்க வென, இராமன் நான் பெற்றோர்



சொற்படி பதினான்காண்டு கழித்து வருகிறேன். அது மட்டும் எனக் கீடாக நீ ஆள்வாயெனப் பரதன் ராமன் மிதியடியைப் பெற்று மீண்டு, நந்தியூர் என்னும் சிற்றூரில் தங்கி, மிதியடியை முடிபுனைந் தரியணை யிருத்தி அதை வணங்கி வந்தனன். சத்துருக்கன் ஆட்சி புரிந்து வந்தனன்.

சித்திர கூடத்தைவிட்டு இராமன் தமிழகத்தை யடைய ஆரியர் வரவேற்கச் சில நாளங்கிருந்து சரபங்கன் நிலையை யடைந்திருந்தனர். ஒரு நாள் முனிவர்கள் ஒன்று கூடி வந்து தமிழகத்தில் தாங்கள் தவ வேள்வி செய்ய முடியாமல் கரன் தடுப்பதைக் கூறி அவனைக் கொன்று தங்களை வாழ்விக்கும்படி வேண்டினர். ராமன் அதற் கிசைந்து விடை பெற்றுச் சென்று முனிவர் இருக்கையில் தங்கித் தமிழ் கற்றும், வேள்வி செய்ய முனிவர்க் குதவியும், இரண்டகத் தமிழரை நட்பாக்கியும் பத்தாண்டினை அங்கே கழித்தனன். பின் அகத்தியன் நிலையை யடைந்து அவனால் ஒரு வில்லும், இரு அம்புக்கூடுந் தரப்பெற்றுச் சென்று பஞ்சவடி என்னும் இடத்தில் தங்கி யிருந்தனர்.

இராமன் ஒரு நாள் தனித்துலாவிய காமவல்லியைக் கண்டு காமுற்று, அவள் அறிவுரையைக் கொள்ளாது கையைப் பிடித்திழுத்து வற்புறுத்தினான். அவள் திமிறிக்கொண்டு விரைந்து சென்றனள். இராமன் தன் தம்பியால் அத்தமிழரசியை மூக்கையும் காதையும் முலைக்கண்களையும் அறுத்துக் கொன்று, முன்னேற்பாடில்லாத கரனையும் பொருதழித்தான்.

தூதரால் செய்தி யுணர்ந்த இராவணன் கொதித்தெழுந்து தேரேறி விந்தஞ் சென்று, காமவல்லி வளர்த்த மானைவிட்டு இராமலக்குவரைப் பிரித்து அவரை வளைத்துக் கொள்ளும்படி வீரரை வைத்துச் சீதையை எடுத்து வந்தனன். சீதை புலம்ப, உன்னை உன் கணவன்வயின் நல்லறிவு புகட்டி அவனுடன் அனுப்புகிறேன் அஞ்சேல் எனத்தேற்றித் தன் தங்கையின் நிலையில் வைத்துப் போற்றி வந்தனன்.

மறவரால் வளைக்கப்பட்ட இராமலக்குவர் அவரை யோட்டிச் சென்று இலைக் குடிலில் சீதையைக் காணாது வருந்தித் தேரடிப் பாதையைப் பின்பற்றிச் சென்று ஒரு முனிவன் குடிலை யடைந்தனர். அவன், சீதையை இராவணன் இலங்கை கொண்டு செல்வதையும், வாலியால் துரத்தப்பட்டு மதங்கரிடமுள்ள சுக்கிரீவன் வரலாறுங் கூறியனுப்பச் சென்று மதங்கரைக் கண்டு நிகழ்ந்தது கூறினர். அங்கே அனுமன் வர மதங்கர் அவர்களை அறிமுகப் படுத்தி அனுமனுடன் அனுப்பச் சென்று சுக்ரீவனைக் கண்டு வரவுகூறி உதவி நாடினர். அவன் என் அண்ணனைக் கொன்று எனக்கு அரசீந்தால்

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – கதைச்சுருக்கம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



உனது மனைவியை மீட்க உதவுவேன் என்றான். இராமன் அதற்கிசைந்து வாலியுடன் பொரச்சொல்லி இருவரும் பொரும்போது மறைவிலிருந்து அம்பெய்து வாலியைக் கொன்று சுக்கிரீவனைக் கிட்கிந்தைக் கரசனாக்கி மதங்கர் நிலையை அடைந்திருந்தான்.

சீதையைப் பார்த்துவரத் தேவியோடு சென்ற இராவணன், இராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவன் படையொடு இலங்கையை முற்ற வரப்போவதாகக் கூறிச் சென்றனன். சீதை, தன்னால் இலங்கை போர்க்களமாவதை எண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கையில் பீடணன் மகள் திரிசடை அங்கு வரவே சீதை அவளிடம் தன் கணவன் படையெடுத்து வர விருப்பதைக் கூறித் தன்னால் இலங்கை போர்க்களமாகுமே என வருந்த, திரிசடை இராவணன் திறமை கூறி, இராமனால் இலங்கையை முற்ற முடியாதெனத் தேற்ற, சீதை எனக்கு அச்சமாக இருக்கிறது, உன் தந்தையிடம் சொல்லி என்னை எப்படியாவது என் கணவனிடம் சேர்த்துப் போரில்லாமல் செய்வாயென வேண்டினாள். திரிசடை அவ்வாறே தன் தந்தையிடம் சென்று கூற,அவன் சரியெனக்கூறி யனுப்பிவிட்டுத் தானும் இராமனை யடைந்து சுக்கிரீவன்போல் அரசனாக எண்ணி அதைத் தன் நண்பன் நீலனிடம் கூறி ஆவன செய்யுமாறு ஏற்பாடு செய்திருந்தனன்.

இராமன் சீதையைப் பார்த்துவரும்படிசுக்கிரீவனது அமைச்சனை அனுமனை அனுப்பினன். அனுமன் இலங்கை சென்று ஓர் ஆரியனால் பீடணன் நிலைமை யறிந்து சென்று பீடணன் மனையை யடைந்தான். பீடணன் அனுமனை வரவேற்றுத் தனது எண்ணத்தைக் கூறவே, அனுமன் அவ்வாறே செய்வதாக உறுதி கூறித் திரிசடையுடன் சென்று சீதையைத் தனியாக அழைத்து வந்து இராமன் படையொடு வந்து இலங்கையை யழித்து உன்னை மீட்டுச் செல்வா னெனவே, சீதை திடுக்கிட்டு இராவணன் பெருமை கூறித் தனியாக வரும்படி கூறுமெனக் கூறித் திரிசடையுடன் சென்றனள்.

அனுமன் வெளிச் செல்லும்போது வாயிற் காவலர் பிடித்துக் கொண்டுபோய் இராவணனிடம் விட்டனர். இராவணன் அவன் வந்த வரலாற்றைக்கேட்டு, அயலானோடு கூடி அரசைக்கொன்ற இரண்டகச் செயலைக் கண்டித்துக்கூறி, இராமனைத் தனியாக வந்து மன்னிப்புக்கேட்டு மனைவியை யழைத்தேகும்படி கூறெனக் கூறி யனுப்பினன்.

அனுமன் சென்று கூறவே, இராமன் பணிவை மறுத்துப் படையுடன் சென்று இலங்கைப்புறத்துத் தங்கினான். ஒற்றரால் இதனை அறிந்த இராவணன், ராமனிடம் அதிகாயனைத் தூது விட்டான். ராமன் பணிவை மறுத்துப் போருக்குத் தயாரெனக் கூறிவிட்டனன். இராவணன் பேரவை கூட்டிப் போரில் இராமனை முறியடிப்பதே



ஏற்றதென முடிவு கண்டனன். அப்போது பீடணனெழுந்து ராமன் திறமைகூறி, "சீதையை விட்டு உறவு கொள்வோம். மீளானாயின் விந்த நாட்டை விட்டேனும் பகையின்றி வாழ்வோ" மென்றனன். இராவணன் வெகுண்டு அவையைவிட்டோடும்படி கூற, அவன் அவ்வாறே சென்றனன்.

அவையை விட்டுச் சென்ற பீடணன்—நீலன், வேலன், குயிலன், நேரி என்னும் படைத்தலைவருடன் சென்று அடைக்கலமென இராமன் காலில் விழுந்தான். அவன் புகல் தந்து அப்போதே இலங்கை யரசனாக அவனுக்கு முடிசூட்டினன். பீடணன் இலங்கையை எளிதில் வெல்வதற்கான உளவையெல்லாம் இராமனுக்கு உரைத்தனன்.

இதையறிந்த இராவணன் கடுஞ்சினங்கொண்டு போர்க்குத் தயாராகும்படி படைத்தலைவருக்குக் கட்டளையிட்டான். தானைத் தலைவர் முரசறைவித்தனர். தமிழ் மறவர் போர்க்கோலம் பூண்டு திரண்டனர்.


பொழுது புலர்ந்ததும் பகைப்படை நகர்ப்புறத்து வந்து தங்கிற்று. இராவணன் கோட்டையைக் காப்பமைக்கும்படி கட்டளையிட்டுப் பகைப்படை நிலைமையை அறிந்துவர ஒற்றரை ஏவினான். பீடணன் அவரைக் காட்டிக்கொடுத்தனன். இராமன் அவரைச் சிறையிட்டனன். இவ்வாறு பல முறை காட்டிக்கொடுத்தனன் அக்கடைமகன்.

ஆரியப்படை ஊரை முற்றியது. மதில் போரில் வடவர் படை தோற்றது. களங்கண்டு பொருதனர். பின் இரண்டு நாள் இரவும் பகலும் ஓயாது போர் நடந்தது. இருபடையிலும் பலர் மாண்டனர்.

கும்பகன்னனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இராமன் சமயம் பார்த்து முறையின்றிக் கைகால்களை யறுத்துக்கொன்றான். செய்தி கேட்ட இராவணன் கதறிப் புலம்பச் சேயோன் தேற்றிச் சென்று போர்க்களம் புக்கான்.

ஓரிடத்தில் கும்பலாக இருந்த ஆரியப்படையொடு தனியாகப் பொருது கொண்டிருந்தான் சேயோன். பீடணன் இராமனிடம் கூறி 'இதுவே அவனைக் கொல்ல ஏற்ற கால மென்றான். ராமனேவ லக்குவன், பீடணன், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் பெரும் படையுடன் சென்று வளைத்துப் பொருதனர். ஒருவன் பின்னாலிருந்து தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். முடிவில் சேயோன் அம்புக்கூடு வறிது பட்டது. வாள் முதலிய கொண்டு பொருதான். அந்தோ! முடிவில் இலக்குவன் ஓரம்பை யேவித் தமிழர்குலக் கொழுந்தைத் தலையை யறுத்துக் கொன்றனன்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – கதைச்சுருக்கம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்





அது கேட்ட இலங்கை ஓவென்றலறியது. இராவணன் பலவாறு புலம்பிச் சீறியெழுந்து களஞ் சென்றான். இராவணனுக்கும் இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இலக்குவன் முதலிய அனைவரும் சூழ்ந்து பொருதனர். இராமன் தேர்ப்பாகனைக் கொன்றான். பீடணன் குதிரைகளைக் கொன்றான். இராவணன் வெகுண்டு அப் பாவி மேல் எறிய வாளை ஓங்கினான். இலக்குவன் குறுக்கே வந்து அம்பெய்யவே அவ்வாளை அவன் மேல் எறிந்தான். அப்போது, அதாவது இலக்குவன் பக்கம் வாளெறியத் திரும்பும்போது, மாதலி என்பான் ஒரு கூரிய அம்பை இராமனிடம் கொடுத்து, வாள் எறிந்து திரும்பு முன் கொல்க எனவே, முறை கெட்ட இராமன் அவ்வாறே தமிழகம் புலம்பத் தலையறுத்து வீழ்த்தினான். தமிழர் மாபெருந் தலைவன் உடல் மண்ணில் புரண்டது. அடுகளம் அழுகளமாயது. வண்டார்குழலி உடனுயிர் விட்டனள். யாவரையும் அடக்கம் செய்து காடு வாழ்த்திச் சென்றனர் தமிழர். இராமன் பீடணனுடன் கோயில் புக்கிருந்து, பீடணனால் சீதை அழைத்துவரப்பட, அவள் இராவணன் பெருமை கூறி வருந்தினாள். இராமன் அதைப் பொருட்படுத்திலன்.

இராமன் பீடணனோடு, தமிழகத்தில் தமிழரைப் போல எல்லா உரிமையையும் எய்தி ஆரியர் நிலையாய் இருந்து வாழ்தற்கேற்ற ஒப்பந்தஞ் செய்துகொண்டு, பீடணனை இலங்கை யரசனாக்கிப் பெரும் படையைக் காப்பாக வைத்துவிட்டு அயோத்தி சென்றனன். சுக்கிரீவன் கிட்கிந்தை சென்றனன்.

இராமன்அயோத்தி சென்று முடிபுனைந்து அரசு புரிந்து வருகையில், ஓர் ஆரியன் தனது மாண்ட பிள்ளையுடன் அரண்மனையையடைந்து, "உனது நாட்டில் ஒரு சூத்திரன்—தமிழன் தவஞ் செய்கிறான். அதனால், எனது பிள்ளை இறந்தது" எனக் கூற, அதைக் கேட்ட இராமன்ஆரியர் வழிகாட்ட அங்குச்சென்று, பீடணனதுஆரியஅடிமையாட்சியை வெறுத்து வாள் வடக்கிருந்த—உயிர் விடற்கு உண்ணா நோன்பிருந்த சம்புகன் என்னும் தமிழ் மகனை வெட்டி வீழ்த்தி நகருற்றான். ஆரியர் செத்த பிள்ளை பிழைத்ததெனக் கூறிவிட்டனர்.

ஒருநாள் ஓர் ஒற்றன் இராமனிடம் வந்து 'அயலான் மனையில் பல மாதம் இருந்தவளை அழைத்து வந்து வைத்துக்கொண்டான்' என ஊரார் பழிக்கின்றனர் எனக் கூறினான். இராமன் அதைச் சீதையிடம் கூறிவருந்தினான். சீதை ஊர் பழிப்பதற்கு அஞ்சக்கூடாது எனக் கணவனைத் தேற்றினாள். எனினும் இராமன் மனம் ஒப்பாது இலக்குவனால் சீதையைக் காட்டில் கொண்டு போய் விட்டு விட்டு நாடாண்டு வந்தனன்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்

# 1. தமிழகக் காண்டம்

## 2. தமிழகப் படலம்

### கலிவிருத்தம்

1. தெண்டிரை மூன்று திசையினுங் காப்ப
வண்டமிழ் விந்த மலைவடக் கார்ப்பப்
பண்டுந முன்னர் பயன்பட வாழ்ந்த
தண்டமிழ் வேலித் தமிழகங் காண்பாம்.

2. நனிமிகு பண்டுநந் நற்றமிழ்ச் செல்வி
பனிமலை காறும் பகைசிறி தின்றி
இனிதுயர் வெண்குடை நீழ லிருந்து
தனியர சோச்சித் தமிழகங் காத்தாள்.

3. சீரியல் வாய்ந்த செழுந்தமி ழன்னை
மாரி வழங்கும் வடதலை நாட்டை
ஆரிய ரென்னு மயலவர் தங்கள்
பேரறி யாத பெருமையி னாண்டாள்.

4. விந்த வடக்கு விளங்கி யிருந்த
நந்தமிழ் மக்கணன் னாகரி கத்தைச்
சிந்து வெளிப்புறந் தேறி யறிந்தார்
சிந்தை மகிழ்ந்து செருக்குற நாமே.

5. சிந்துவி னொன்றே திசையிசை மேய
அந்தநன் னாட்டி னகன்றதன் மேற்கில்
நந்திய வாணிக நாடிருப் பாக
வந்தனர் வாழ்ந்து மணித்தமிழ் மக்கள்.


### பெருவளநாடு

6. தன்கடன் குன்றித் தமிழகங் கொண்ட
தென்கடல் முன்பு செழுந்தமிழ் நாடா
நன்கட னாடு நனிவளந் தேங்கிப்
பொன்கட னாடப் பொலிந்தது காணும்.

---

5. நந்திய-தழைத்த. வாணிக நாடு-யவன நாடு. 6. கடல் நாடும்-கடலும் விரும்பும். பொன் கடன் நாட—செல்வம் கடன் கேட்க.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



10 1. தமிழகக் காண்டம்

7. ஆயிரங் கல்லி னகன்ற பரப்ப
தாயய னுட ரவாவுற நீங்கிப்
போயவ ரேங்கப் பொலிவுறு செல்வம்
தாயது மாண்ட சரக்கறை மானும்.

8. ஆயநன் னுட்டி னணியுறுப் பாக
ஞாயிறு செல்ல நடுக்குற வோங்கிச்
சேயுயர் வானின் றிகழ்மணித் தூணின்
மீயுயர் செல்வக் குமரி விளங்கும்.

9. அம்மலை மேற்கி னணியர ணுகத்
தம்மன வூக்கந் தளர்வுற வொன்னுர்
செம்மலை வீழ்க்குந் திறனொ டகன்று
கம்மென வானங் கடந்துற வோங்கும்.

10. அம்மலை தோன்றி யதன்பெயர் பெற்றுக்
கைம்மலை கண்டு களித்தெதிர் செல்லும்
மைம்மலை போல வளனுறப் பாய்ந்தே
அம்மலை நாட்டையவ் வாறணி செய்யும்.

11. நாட்டு புகழ்த்தமிழ் நாட்டி னதுதென்
கோட்டிலின் றுள்ள குமரி முனைக்கு
நோட்ட மிகுமிரு நூறுகற் றெற்கில்
ஊட்டுங் குமரியா ரோடின காணும்.

12. தொன்மலை யென்னத் துலங்குங் குமரி
நன்மலைத் தெற்கின் நனிமுகில் மேயும்
பன்மலை யோடு பழந்தமிழ் நாட்டு
மன்மலை யாத மணிமலை யோங்கும்.

13. வானுற வோங்கி வளஞ்செய் குமரி
தானுற வாகித் தளைப்படுத் தென்ன
ஊனுற வொன்றி யொருதொட ராகி
ஆனவப் பன்மலை யாங்கணி கிற்கும்.

14. அத்தொடர்க் குன்றத் தருமக வாகி
முத்தமி ழாளர் முதுநெறி போலப்
பத்தி யருதுசெல் பஃறுளி யாறு
புத்துண வாக்கிப் புதுவிருந் தாற்றும்.

9. செம்மல் - (பகைவரின்) செருக்கு. 11. நோட்டம்-பார்வை. ஊட்டுதல்-வளஞ் செய்தல். 12. மலைதல் - மயங்குதல்.

2. தமிழகப் படலம் 11

15. மைவளம் பட்ட வளக்கும ரிக்கும்
நொய்வளம் பட்டவை நூறுகற் றெற்கில்
பைவளம் பட்டநீள் பஃறுளி யாறு
பெய்வளம் பட்டுப் பெருகியே சென்ற.

16. இன்னு முகிலின மேயபல் குன்றுந்
துன்னுபல் லாறுந் தொகுவளஞ் செய்ய
என்னிலை யென்றவ் விருநில மங்கை
மன்னு பெருவளம் வாய்ந்து பொலிந்தாள்.

17. குணகரை குன்றங் குறும்பனை யோடு
மணமிகு தெங்க மதுரைமுன் பாலை
இணருபின் பாலையோ டேழ்தலை மேய
உணவமல் நாற்பதோ டொன்பது நாடே.

18. கொல்லம தோடு குமரி முதலா
மல்லன் மிகும்பன் மலைவள நாடும்
எல்லியல் பாகவே ழேழொடு குன்று
நல்லியல் பாகவந் நாடுபொலிந்த.

தென்பாலி

19. அப்பெரும் பஃறுளி யாற்றின தெற்கில்
திப்பிய தென்கடல் தெற்கின தாகக்
கப்பிய பல்வளங் காமுற யாரும்
நப்புகழ் மேயதென் பாலி நளியும்.

20. இடைநில மைந்துநா றெண்ணரு கல்லிற்
படவொளி மேய பவளமு முத்தும்
கொகுட நாட்டுக் கொழும்பொரு [illegible] ளாடு
கடல்வளங் கண்டு களித்ததந் நாடே.

15. நொய்—மென்மை. பை—பசுமை, அழகு. பெய்வளம்—மழைவளம். 16. 'என் நிலை' — தருக்குச் சொல். 17. இணர்தல்-நெருங்குதல். அமலுதல்-பெருத்தல். ஏழ்தலைமேய - ஏழ்என்னும் எண்ணை முதலிலுடைய. ஏழ்குணகரைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குறும்பனை நாடு, ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலை நாடு, ஏழ்பின்பாலைநாடு எனக் கொள்க. 18. கொல்லம், குமரி முதலிய மலைநாடுகள். எல் - பெருமை. நல் இயல்பு ஆக—நல்ல வளம் பொருந்த. அந்நாடு—பெருவளமும் தென்பாலியும். 19. ந - சிறந்த. நளியும் - பரந்திருக்கும்.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



### எழுசீர் விருத்தம்

21. பருவ ளக்குமரி யோடு பஃறுளி யாறு வீறுகொடு பாய்தலான்
பெருவ ளத்தின தாற்பெ ருவள நாடெ னும்பெயர் பெற்றதால்
குருவ ளக்குமரி பாய்த லாற்குமரி நாடெ னும்பெயர் கூறுமால்
மருவ ளத்தெதென் பாலி ருத்தலான்வழங்குமஃ துதென்பாலியே

### கலிவிருத்தம்

22. இன்ன முப்பெரு நாடமை கிற்குமுன்
அன்ன வாறியல் அப்பேர் நிலப்பரப்
புன்ன வாய்கிலா வோர்பெருங் கண்டமாப்
பன்னு மாறு பரந்து கிடந்ததாம்.

23. அன்று வான மளாவு பனிமலை
ஒன்று மாழியா நின்றது வாரியுட்
சென்று மூழ்கிடு தோறுமத் தென்னிலம்
இன்று போலாங் கெழுந்ததத் தொன்மலை.

24. இலைப்ப ரப்பெனில் என்னவே யப்பெரு
நிலப்ப ரப்பு நிலநடுக் கோட்டினில்
அலைப்ப ரப்பி னமைந்தங் கிருந்தது
தொலைப்ப ரப்பெனச் சொற்றிடு மாறரோ.

25. நன்றெ ளிப்பிழம் பாகிய ஞாயிறு
தன்ற னிற்சுழல் தன்னிற் சிதறிய
சென்ற தான திவலையே யின்னுயிர்
ஒன்று மிவ்வுல கென்றுமே யோதுவர்.

26. அன்ன வாறு சிதறிய வப்பொறி
தன்னிற் சுற்றலாற் றண்ணென் றிறுகியே
இன்னு யிர்தோன்றற் கேற்ற நிலையினை
அன்ன துந்நா ளடைவி லடைந்ததே.

22. உன்ன வாய்கிலா-எண்ண முடியாத. 23. ஆழி, வாரி-கடல். 24. எனில் பரப்பு இலை-என்னை விடப் பரப்புடைய நிலப்பகுதி இல்லை. அலை-கடல். 25. தன் தனில் சுழல்-தன்னைத்தானே சுற்றுதல். சிதறிய சென்ற-சிதறிச் சென்ற.



27. ஆடு பம்பரத் தாடுநாப் பண்விரைந்
தாடு மிவ்வுல கன்னவா றேயுயிர்
கூடு தன்மை குயின்ற நிலநடுக்
கோடி ருந்தா லப்பெருங் கோநிலம்.

28. ஆத லான்முத லவ்வயி னேயுயிர்
போத நின்ற புகழின தாதலான்
மாத மிழக மக்களே மாநிலம்
மீது போந்த முதலென விள்ளுவர்.

29. உலக முன்னு டுயர்தமிழ் நாடதே
உலக முன்மக்க ளொண்டமிழ் மக்களே
உலக முன்மொழி யொண்டமி ழேயிதை
உலக மின்றறி யாநிலை யுள்ளதே.

30. அத்த குப்பழங் காலையே யன்னவர்
எத்த கைய ரெனவேயிந் நாளையர்
நத்த வத்தகு நாகரி கத்தொடு
வைத்த வாறு வளத்தொடு வாழ்ந்தனர்.

31. ஆங்க ரும்பிய அந்நாக ரிகமே
வீங்கு சிந்து வெளியில் மலர்ந்துபின்
ஊங்கு சென்றிவ் வுலக முழுவதும்
பாங்கு டன்மணம் வீசிப் பரந்ததே.

32. ஆங்கு நின்றிவ் வுலக மடங்கலும்
பாங்கி னன்னராங் காங்கு பரவினர்
ஏங்கு தட்பவெப் பந்நிலைக் கேற்பவே
ஈங்கு வெவ்வே றினமொழி தோன்றின.

33. ஈத றிகிலா ஏழை யுலகினர்
மாத மிழ்மக்கள் வாழவிங் கேமுனம்
போத நின்ற புதுக்குடி யாமென
ஓது வாருண்மை யோர்கிலா தூமர்போல்.

27. நாப்பண்—நடுப்பகுதி. ஆடுபம்பரத்து நாப்பண் விரைந்து ஆடும்; இவ்வுலகு அன்னவாறே நடு இடத்தில்-விரைந்தாடும்; அப் பெருங் கோநிலம் நில நடுக்கோடு—கோட்டில்- இருந்ததால் உயிர் கூடும் தன்மை குயின்ற எனக்கூட்டுக. குயின்ற-அடைந்த-அடைந்தது. கோநிலம்-முதல் நிலம். 28. தமிழக மக்கள்-தமிழ், தமிழகம், தமிழ்மக்கள் எனக் கூட்டுக. மாநிலம்-உலகம். 30. ஆறு-நீங்காத, குறையாத. 32. ஏங்குதல்-மாறுதல். ஈங்கு-இவ்வுலகின்கண். 33. ஏழை உலகினர்-அறிவில்லாத உலகினர். போதநின்ற-போந்த, வந்த.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



34. கருவி லேயுல கம்முதன் மக்களாய்
வருத மிழ்மக்கள் வாழ்ந்தவத் தொன்னிலம்
பொருவி லாத பொருகடல் போந்துமுன்
பருகி லாத பகுதியைக் காணுவாம்.

கொச்சகம்

35. தன்னிகராந் தமிழ்வளர்க்கத் தலைச்சங்கந் தனைநிறுவி
மன்னுபெரும் புகழ்பூத்த மழைவளக்கைப் பாண்டியர்தந்
துன்னுமுயர் பதியான தொன்மதுரை யெனுநகரைத்
தன்னுடைய தலைநகராத் தான்கொண்ட தந்நாடே.

36. அந்நகரம் பஃறுளியாற் றங்கரையி லுலகிலுள
எந்நகரு மிந்நகருக் கிணையாகா தெனும்படிக்குத்
தன்னிகராந் தமிழ்வளர்க்குந் தலைக்கழக மோடுதமிழ்
மன்னர்களும் புலவர்களும் வாழ்நிலையா விருந்ததுவே.

திராவிடம்

37. அந்நாட்டின் வடக்காவா னணிவிந்த மதன்றெற்கா
நன்னாட்டின் முன்னாட்டு நாடாநன் னலங்காட்டும்
பன்னாட்டு முன்னீட்டும் பயன்காட்டும் படியமைந்த
தென்னாட்டின் வடநாடாந் திருநாடு திகழ்ந்ததுவால்.

38. மலைப்பிறந்து கற்றவழ்ந்து மலைச்சாரல் வழிநடந்தே
இலைப்பரந்த நறுமுல்லை எதிர்கானத் திடைவளர்ந்து
தலைப்பிறந்த வளமருதந் தனைமருவிப் பயனுதவி
அலைப்புகுந்து நலம்புரியு மாறென்ப வவ்வாறே.

39. வடவரையு மிடைவரையும் வானளவுங் குடவரையும்
மிடைவரையா தெழுகோதா விரிகாரி பெண்பாலி
தடவரைகா விரிவானி தமிழ்வையை பொருநைமுதல்
நடைவரையா வாறுகளால் நல்வளத்த திருநாடு.

40. மலைவளமுங் கான்வளமும் மருதவயற் பெருவளமும்
அலைவளமுந் தலைமயங்கி யருவளமா வமைந்ததொடு
நிலவளநீர் வளமெல்லாம் நிலைவளமா நிலவியதால்
இலகுதிரா விடமெனப்பே ரேற்றதுவா லிந்நாடே.

39. மிடைதல்—நிறைதல். வரைதல்—நீக்கல். காரி—கிருஷ்ணா. பெண்—பெண்ணையாறு. நடைவரையா-வற்றுத. 40. திரு ஆ இடம்-செல்வம்பொருந்திய இடம். திரு—செல்வம். ஆ—ஆகும், ஆதல்.



41. அத்தகைய திருநாட்டை யறந்திறம்பா வகையான்ற
முத்தமிழின் காப்பாக மொழிபிறழா வழிமுறையின்
ஒத்தபெருந் தலைமையின்கீ ழுகந்துதமிழ் வேளிர்பலர்
தைத்தலைஇய வாண்மையொடு தனிக்காத்து வந்தனரே.

42. மஞ்சுதவழ் தருமேற்கு மலைத்தொடர்கீழ்ப் படமேற்கில்
விஞ்சுபுகழ்ப் பெருஞ்சேர வேந்தர்வழி வழியாக
வஞ்சியெனப் பெயர்பூண்ட மலிவளத்த திருநகரில்
அஞ்சலெனக் குடிகாத்தா ரமைதியுட னதன்கீழ்ப்பால்;

கிழக்கு நாடு

43. சிங்களஞ்சா வகமுதலாந் தீவுகளுந் திரையோவா
வங்கவிருங் கடற்பரப்பும் மரஞ்செறிகான் மலையருகச்
செங்கரும்புஞ் செந்நெல்லுஞ் செருக்கொடுவான் றொடவிகலும்
பொங்குவள வயல்மருதம் புனைநாடாப் பொலிந்ததுவே.

44. அம்மருத வளநாட்டி னணிநாகை யெனுநகரில்
மும்மதிலின் கோயிலிடை முறைதிறம்பா வகையிருந்து
செம்மையுடன் றமிழர்களைத் திசைமணக்குந் தமிழ்ச்சோழர்
தம்முயிரின் காப்பேபோற் றனிக்காத்து வந்தனரே.

45. அந்நாடு கிழக்கிருந்த தாற்கிழக்கு நாடெனவும்
முன்னோடு மருதவள முதன்மைகொடிந் திரமெனவும்
தென்னாடுந் திருநாடும் செவிகேட்கும் புகழ்வாய்ப்ப
எந்நாடு மிணையில்லே மென்வேங்க விலங்கினதே.

46. அக்கிழக்கு மேற்கொடுநல் லணிகிளர்தென் பாலியும்பொன்
தொக்கிருக்கும் பெருவளமும் தொகுவளத்த திராவிடமும்
மக்களுக்கும் புட்களுக்கும் மாக்களுக்கும் வேண்டுவன
புக்கிருக்குந் தமிழகமாப் பொருவிலவாப் பொலிந்தனவே.

கலிவிருத்தம்

47. இவ்வகை நான்குட னியன்று பல்வளந்
துவ்விய தமிழகந் துணிந்த மேலவர்
செவ்விய முறையினிற் சென்ற வைந்நிலக்
குவ்வையின் முதலிய குறிஞ்சி காணுவாம்.

41. தைத்தலைஇய-மிகச்சிறந்த, தலையாய. 45.முன்—கிழக்கு. 47. குவ்வை—கூட்டம்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



48. இடிகுரல் யானைதன் னிளைய வின்னுயிர்ப்
பிடிபசி களைந்திடப் பெரிய யாக்கினை
முடியது படியுற முறிக்கு மோசையாற்
படிசிறு கிளியினம் பறந்து செல்லுமால்.

49. அருவிய முருகிய மார்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்.

50. பன்றியி னினமுருப் பரணங் காப்பருஞ்
சென்றற முதிர்தினைக் கதிர்கொய் செம்மருங்
கன்றிய வள்ளியின் கிழங்கு கன்னருங்
குன்றெதி ரொலிபடக் குறிஞ்சி பாடுவர்.

51. கிளிகடி பரணிடைக் கிளவி வேட்டவன்
குளிர்நிழல் வேங்கையிற் குரவை யாடிடும்
அளிமுரல் குழலியி னளகத் துண்மறை
ஒளிமுக மதியினை யுருவி நோக்குமால்.

52. அடுப்பிடு சாந்தமோ டகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றி னாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாங் கமழுங் குன்றமே.

53. தண்டமி ழகமெனுந் தாயின் மங்கலங்
கொண்டணி விழவயர் குறிச்சி முன்றிலிற்
றொண்டக முழங்கிடத் தோலின் யாக்கையர்
கண்டெனு மொழிச்சியர் களிப்ப வாடுவர்.

54. சந்தன முன்றிலிற் றங்கை பாவையை
மந்திகை செய்துள மகிழச் செய்யுமால் ;
குந்தியே கடுவனுங் குழந்தை முன்மட
லந்திகழ் கிலுகிலி யாட்டித் தேற்றுமால்.

48. யா—ஒருமரம். படி—நிலம். 49. முருகியம்—குறிஞ்சிப்பறை. 50. கன்றுதல்—முதிர்தல். கல்நர் – தோண்டுவோர். 51. அளி—வண்டு. அளகம்—மயிர். 52. சாந்தம்—சந்தனமரம். ஐவனம்—மலைநெல். 53. குறிச்சி–குறிஞ்சி நிலத்தூர். தொண்டகம்-குறிஞ்சிப் பறை. 54. மடல்-ஓலை. கிலுகிலி-கிலுகிலுப்பை.



வேறு வண்ணம்

55. தேனுந்தினை மாவுந்தொகு தெளிவுந்தெளி தேனை
மானுஞ்சுனை நீருங்கழை யோடைவன மடையும்
கானந்தரு கிழங்கும்பல கனியுங்கனி மொழியார்
ஏனந்தனி லேநந்திட வினிதாவிருந் தயரும்.

வேறு வண்ணம்

56. துளிமிகு கூதிரிற் றுணைமை யோடுயிர்
களிமிகி யாமமெய் கலந்தங் கின்புற
அளிமிகு காதல ரணுகி யன்பது
கொளவிட மாய்மழைக் குறிஞ்சி மன்னுமால்.

முல்லை

57. கொல்லியந் தேனெனுங் குதலை வாய்த்தமிழ்ச்
சொல்லியர் முத்தொடு துனிவு கொண்டொளிர்
பல்லென மலர்ந்தவர் பணியத் தோள்பெறும்
முல்லையம் புறவடர் முல்லை காணுவாம்.

58. பூவையுங் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாவிசை பாடமுப் பழமுந் தேனுந்தந்
தேவிசை பெறுங்கடற் றிடையர் முக்குழல்
ஆவின மொருங்குற வருக ணைக்குமால்.

59. மக்களுக் குணவிட வளைக்கை யாய்ச்சியர்
கக்கமுக் கிடத்தயிர் கடையு மோசைகேட்
டக்கறைக் கொண்டுபார்ப் பணைக்கும் பேடையைக்
கொக்கரக் கோவெனக் கூவுங் கோழியே.

60. முதிரையுஞ் சாமையும் வரகும் மொய்மணிக்
குதிரைவா லியுங்களங் குவித்துக் குன்றெனப்
பொதுவர்கள் பொலியுறப் போர டித்திடும்
அதிர்குரல் கேட்டுழை யஞ்சி யோடுமே.

55. தெளிவு-கனிச்சாறு. கழை-மூங்கிலரிசி. மடை - சோறு. 'அயரும் எனச், செய்யுமென் முற்றுப் பல்லோர் படர்க்கையில் வந்தது. பின்னும் இவ்வாறு வருவன கொள்க. 56. அளி-அன்பு. 57. புறவு-காடு. 58. கடறு—காடு. முக்குழல்—கொன்றை, ஆம்பல், வேய்ங்குழல். 59. கக்கம்—தோளிடுக்கு (கிச்சு). முக்கிட—வருந்த. பார்ப்பு—குஞ்சு. 60. பொதுவர்—முல்லைநில மக்கள். பொலி—தவசக் குவை. உழை—ஒருவகை மான்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



61. சிறுமறிக் குழாத்தொடு செல்லு மாப்பிணை
குறுகிடக் கலையிளங் குரலிற் கூவவே
குறுநடைச் சிறுர்மறிக் குட்டி யீட்டிடக்
குறுமுயற் றேற்பறை கொட்டு வாரரோ.

62. கொன்றையம் புறவிடைக் கொடியின் மின்னிவான்
குன்றுறை யிளையகார் குறுகி மாலையிற்
சென்றவர் வரவெதி ருள்ளிச் செவ்வியர்
முன்றிலி னிறைகொள முல்லை யோங்குமால்.

பாலை

63. எல்லிய முதுவெயி லெறிப்ப நல்வள
முல்லையுங் குறிஞ்சியு முறைமை தப்பியே
நல்லியல் பிழந்தற நலிவு செய்திடும்
பல்லவங் கருகுவெம் பாலை காணுவாம்.

64. வற்றிய விருப்பையும் வதங்கு மோமையும்
துற்றிய யானைதன் றுளைக்கை யைப்பிடி
பற்றியே யுரலடி பதைப்ப வெங்கனல்
சுற்றிட வுடல்துடி துடித்துச் செல்லுமே.

65. மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளங் குருளைமிக் கினைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலியசெந் நாயு யங்குமே.

66. போதர வேவிடாய் புலம்பிப் பொள்ளென
மாதறு நீர்ச்சுனை மருவி நீர்பெறுப்
பாதிரி யலர்பறந் தலையின் பாலிரீஇத்
தாதுணம் புறவினந் துயருற் றேங்குமே.

67. கடிக்கமழ் மராமலர்க் கண்ணி யஞ்சிறுர்
படிக்குற வெருத்துக்கோ டன்ன பாலைக்காய்
வெடிக்கவிட் டாடிட விரும்பிக் கோலிஞல்
அடிக்குமோ சையிற்பருந் தஞ்சி யோடுமே.

---

62. இறைகொளல்–இருத்தல். 63. எல்லி–ஞாயிறு. பல்லவம்–தளிர். 65. வெரீஇ–வெருவி. வாய்வெருவுதல்–சோர்வால் வாய் குழறுதல். குருளை–குட்டி. தாய்மை–அன்பு. நன்னர்இல்–நலமில்லாத. உயங்குதல்–வருந்துதல். 66. மாது–அசை. பறந்தலை–பாலைநிலத்தூர். தாது உண் அம் புறவு. தாது–பருக்கை நக்கல். 67. கடிகமழ்–மணம் வீசும். படிக்குஉற–நிலத்தில் விழ.



68. பொருந்திய நண்பகற் போதிற் காளைபின்
திருந்திழைக் கன்னியுஞ் செல்லக் கண்டுமே
இருந்துமே யெம்மனை யின்று நாளைநீர்
விருந்துண்டு சென்மென வேண்டிக் கொள்வரே.

69. தோட்டுணை யாகவே சுரிமென் கூந்தலைக்
கூட்டியே செல்பவன் குற்ற மற்றவன்
ஆட்டிநீ பிரிக்கலை யென்றவ் வன்னையை
மீட்டுமே யூர்செல விடுக்கு வார்களே.

70. ஒட்டிய சுற்றமாங் குறவே மீளியைக்
கட்டியே தழுவிடுங் கற்பைக் கண்டுமே
விட்டிரு வோரையும் விலகு வார்சிலர்
இட்டிரு வோரையு மேகு வார்களே.

71. அடிபடு நிரைகவர் பறையி ஞர்ப்பினுற்
கொடுவரி வெருவுறா உங் கொதிகொள் வெஞ்சுரம்
துடியிடை யிணைதரத் துறந்து செல்பவர்
படருற நண்பகற் பாலை மன்னுமால்.

மருதம்—அறுசீர்விருத்தம்

72. கல்லிடைப் பிறந்த யாறுங் கரைபொரு குளனுந் தோயும்
முல்லையம் புறவிற் றேன்று முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும் நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லலஞ் செறுவிற் காஞ்சி வஞ்சியு மருதம் பூக்கும்.

73. சேற்றினை யுழுவார் சேற்றிற் செந்நெலை விதைப்பார் செந்நெல்
நாற்றினை நடுவார் நாற்றின் நடுக்களை களைவார் நன்னெல்
தூற்றினை யறுப்பார் தூற்றின் சுமையினைச் சுமப்பார் சுற்றும்
ஏற்றினை யுகைப்பா ரேற்றி னிகல்வலி யுழுநர் வாழ்வே.

---

68. இன்று இருந்து விருந்துண்டு நாளை சென்மென. 69. தோள் துணை. ஆட்டி–பெண், 'அம்மா' என்றபடி. அன்னை–செவிலி. 70. மீளி–பாலைநிலத்தலைவன். கற்பு–மணஞ்செய்து கொள்ளும் விருப்பம். 71. நிரை–ஆவினம். கொடுவரி–புலி. படர்–துயர். 72. கல்–மலை. முருகு–தேன், மணம். மல்லல்–வளம். செறு–வயல். 73. சுற்றுதல்–தாம்பாடுதல், போரடித்தல். ஏறு–எருது. இகல்–மாறுபாடு.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



74. நிலையிலாப் பொருளை நீக்கி நிலைப்பொரு ளாக்கு மாப்போல்
அலைபடு பதரும் புல்லு மப்புறப் படுத்தி யான்ற
கலைவலா ருள்ளம் போன்ற களத்திடைக் களமர் மேலை
மலையெனக் குவித்துச் செந்நெல் மணிப்பொலி தூற்று வாரே.

75. தூற்றிய பொலியைத் தங்கள் தொழிலினுக் குதவி நாளும்
ஆற்றிய வினைஞர்க் கெல்லா மளவறிந் தளித்துப் பெற்ற
பேற்றினை யில்லஞ் சேர்த்துப் பெருநிலக் கிழவி தன்னைப்
போற்றியே பொலிக வென்று பொங்கல்வைத் துவக்கு வாரே.

76. போர்க்களம் பாடிப் பெற்ற பொன்மலர் பொலியச் சூடி
மாக்கிணைப் பொருநர் செந்தா மரைக்குள மருதம் பாடி
ஏர்க்களம் பாடிப் பெற்ற பரிசினை யிணையி லாத்தம்
ஊர்க்களம் பாடு வார்தம் முடைப்பரி சாக்கு வாரே.

77. மரைமலர்க் குளத்தி லாடும் மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்த ளந்து பொம்மெனக் களிப்ப ரோர்பால்,
குரைகழற் சிறுவர் போரிற் குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப் புனைநிழ லருந்து வாரே.

78. மழுக்குதா ராக்குஞ் சுக்கு வாத்திளங் குஞ்சு நீத்தம்
பழக்கவக் காட்சி யைத்தாய் பார்த்துள மகிழு மோர்பால்
வழக்குறு மக்க ளுண்டு வழிச்செல விளநீர்க் காயைக்
கொழுக்கவுண் டலுத்துப் போன குரக்கினம்பறித்துப் போடும்.

79. நீரகம் பொருந்த நீரார் நிலவளந் திருந்த நீடும்
ஊரகந் தோறும் செந்நெ லுணவக மருவ ஆணின்
சீரக வியலா ரூடல் செய்யும்மை கறையி லேரார்
பாரக முறவேர்ப் பூட்டும் பைம்புனல் மருத மோங்கும்.

நெய்தல்

80. பொன்னென மலருந் தூய புன்னையங் கான லாங்கண்
முன்னிய வலிய கோள்வல் முதலைய மதலை யுப்பு
மன்னுநீள் கழிக்கண் மூத்த மகன்றிலம் புணர்ச்சி வாய்ந்தார்
தன்னிகர் கொண்க ளோடு தாழைவீ ழூச லாடும்.

76. கிணை-மருதப்பறை ஊர்க்களம்-ஊரிடம். 77. கரிக்குருத்து-யானைக்கொம்பு. போர் - வைக்கோற்போர். புரைதப-குற்றமின்றி. 78. மழுக்குதல் - நீந்தத்தாழ்த்தல். வழக்குறுதல் - நடத்தல். 79. ஊணின் சீரக இயலார்-சமையல் தொழிலில் வல்ல மகளிர். பாரகம் உற-தமிழகம் மேம்பட. 80. கானல்-கடற்கரை.மதலை. இன்றியமையாதது. மகன்றில்-இணைபிரியாது வாழும் ஒரு நீர்ப்பறவை.



எண்சீர் விருத்தம்

81. பட்டினும்பஞ் சினுமயிர்செய் யாடை பீலி
பன்மணிசங் கணிபன்மணப் பண்ட மேற்றி
முட்டிலய னுடிறக்கி நிறைபொன் கொண்டு
முத்தமிழின் கொடிநுடங்கக் கரையை நோக்கி
மட்டவிழ்பூந் திரையில்வருங் கப்பல் கண்டு
'வாழ்கதமிழ், வாழ்கதமி ழக'மோ வென்னப்
பட்டினமக் கடல்வளம்பட் டெனவா லித்துப்
பரதவரப் பெருங்கடலின் பயன்கொள் வாரே.

அறுசீர் விருத்தம்

82. பசிபட வொருவன் வாடப் பார்த்தினி திருக்குங் கீழ்மை
முசிபட வொழுகுந் தூய முறையினை யறிவார் போல
வசிபட முதுநீர் புக்கு மலையெனத் துவரை நன்னீர்
கசிபட வொளிமுத் தோடு கரையினிற் குவிப்பா ரம்மா.


83. பாணியுஞ் சீருந் தூக்கும் பண்ணொடு பொருந்தச் செங்கை
ஆணியுந் திவவுங் கூட்டி யமைத்தயாழ் நரம்பைச் சேர
மாணிழைப் பரத்தி பாட மகன்றில்கேட் டுவக்கும் பாக்கம்
காணிய கலமுள் ளோர்க்குக் கலங்கரை விளக்கங் காட்டும்.

84. வருமலை யளவிக் கானல் மணலிடை யுலவிக் காற்றிற்
சுரிகுழ லுலர்த்துந் தும்பி தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லு மிளமைதீர் மதியந் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங் காட்சிபோற் றேன்று மாதோ.

85. திரைதரு பொருளு முப்புச் செறிவிலைப் பொருளு மல்கக்
கரைவரு கப்பல் நோக்கிக் கானலம் புன்னை சாய்ந்து
நரையிதழ்ப் பரத்தி யேங்கு நாள்வெயிற் காலை யுப்பின்
பெருவளக் குவிய லீட்டும் பெருமணல் நெய்த லோங்கும்.

81. முட்டு-தடை. மட்டு-தேன், மணம். ஆலித்தல்-ஒலித்தல். 82. முசிதல்-அறுதல். முசிபடுதல்-கெடுதல். வசிபட-இருப்பிடம் கெட. துவர்-பவளம். 85. மல்க-நிறைய. நரை இதழ்-(பிரிவால்) வெளுத்த இதழ்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்



22 திணை மயக்கம் 1. தமிழகக் காண்டம்

86. ஆய்ச்சியர் கடைந்த மோரு மளையொடு தயிரும் பாலும்
காய்ச்சிய நெய்யும் விற்றுக் கரும்பினைக் கசக்கப் பண்ணும்
வாய்ச்சியர் தந்த நெல்லும் வழியிடை யுப்புங் கொண்டு
போய்ச்சுவை படச்சோ றுக்கிப் புசிப்பர்தங் கிளைக ளோடே.

87. குன்றுறை கோட்டி யானை குறுகியே பழனந் தன்னைத்
தின்றுசெங் கரும்பைக் கையிற் செழுங்கிளைக் காகக் கொண்டு
சென்றிடும் வழியில் வேங்கை செருக்கவக் கரும்பாற் றுக்கி
வென்றதை யெயினர் கொள்ள வீசிவே தண்டஞ் சாரும்.

88. புல்லிய சுடுவெம் பாலைப் புருவயல் மருதம் புக்கு
நெல்லயின் றேகும் போது நீர்க்கொடி பலவைக் கவ்விச்
செல்லவே யிளம்பார்ப் பென்று செருச்செய்தச் சுளைப்பலாவை
முல்லையாய்ச் சிறுவர்க் காக்கி முளைப்பொடு பறந்து செல்லும்.

89. அஞ்சிறைப் பொன்காற் பூவை யலர்குருந் திருந்து கேட்பப்
பஞ்சிறைப் பவளச் செவ்வாய்ப் பைங்கிளி குறிஞ்சி பாடும்
நெஞ்சுநெக் குருகித் தும்பி நெய்தலை நீத்துச் செல்ல
வஞ்சியர் முகம்போ லுந்தா மரையளி மருதம் பாடும்.

90. வரைதரு பொருளுங் கானம் வழங்குறு பொருளுந் செந்தா
மரைதரு மருத வேணி மலிதரு பொருளு முந்நீர்த்
திரைதரு பொருளு முள்ளூர் செறிதரு பொருளு மெங்கும்
விரைதரு பொருள வாகி மெய்மயக் குறுத்த தம்மா.

91. யாணர்கொண் டெதிர்ப்பாடான வதரிடைச் சிறுபேர் நல்யாழ்ப்
பாணரும் பொருநர் தாமுங் கூத்தரும் பருங்கட் செவ்வாய்ப்
பூணணி விறலி யோடு புலவரும் பெற்ற செல்வம்
மாணுறப் பெறவே யாற்றுப் படுக்குவர் வள்ளி யோர்பால்.

92. முல்லையைக் குறிஞ்சி சார முல்லைமற் றதனைச் சார
எல்லியுண் டாக்கு பாலை யிருமையுஞ் சேரச் சார
மல்லலஞ் செறுவை நெய்தல் மருவிட மருதந் தன்னைப்
புல்லிடக் கழியை யைந்தும் புணரியாப் புறுமாங் காங்கே.

86. அளை - வெண்ணெய். வேதண்டம் - மலை. 87. எயினர் - பாலைநில மக்கள். 88. கொடி—காக்கை. பலாச்சுளையைத் தன் குஞ்சென்று மயங்கியது புரு. 89. பஞ்சு-செம்பஞ்சு. இறை-தங்குதல். 90. ஏணி-நாடு. விரைதல் - ஒன்றுக்சொன்று முற்படுதல். 91. இதுவும் ஐந்நிலத்தும் நிகழ்வது.

3. மக்கட் படலம் 23

93. அருந்தமி ழகத்தெப் பாலு மமைந்தநா னிலத்தாங் காங்கே
பொருந்திய நடுவண் வானம் புகுதரு மாடக் கோயில்
இருந்தனர் தலைவ ராறு ரினத்தொழில் மக்க ளெல்லாம்
திருந்திய சிற்றா ராங்கண் திகழ்ந்தனர் புறஞ்சூழ்ந் தம்மா.

94. பேரர சதன்கீழ் மூன்று பெருந்திற லரசு மந்தச்
சீரர சதன்கீழ்ச் செங்கோற் றிருவமர் நாடும் நன்னாட்
டாரர சதன்கீழ்ச் சீறூ ரரசுமாங் கமைந்து மக்கட்
சாரர சுரிமை பூண்டு தமிழகம் பொலிந்த தம்மா.

95. எழுநிலை மாடக்கூடத் தியன்றகல் தெருவந் தாங்கி
நழுவிலா வளங்கள் மேவி நலவழிப் படிவீ டெல்லாம்
வழிவழி பெருகி மக்கள் வாழ்வதற் கேற்ற வாறு
பழமரச் சோலை சூழ்ந்து பசந்திருந் தனசீ ரூரே.

96. இன்னபல் வளத்த தாகி யியற்கையி னியல்பி யாவும்
மன்னிய குறிஞ்சி முல்லை வளமிலி மருத நெய்தல்
அந்நெறி யமைந்த செல்வத் தைந்நிலக் கிழமை தாங்கித்
தன்னிக ரிலாத மேன்மைத் தமிழகம் பொலிந்த தம்மா.

97. ஐம்பெருங் கண்ட மாவின் றமைதரு முலகில் வாழும்
வம்பலர் பயில்வண் டன்ன மக்களெல் லோர்க்கு முன்னர்த்
தம்பெயர் விளங்கப் போந்த தாயகம் இதுவே யென்றால்
இம்பரி னிதனுக் கீடொன் றிதுவலாற் பிறிதொன் றுண்டோ!

## 3. மக்கட் படலம்

### வஞ்சி விருத்தம்

1. அத்த மிழகத் தாய்தரும்
முத்த மிழ்த்துறை முற்றிய
மெய்த்த மிழ்ப்புல வேந்தரைப்
புத்து ணர்வுறப் போற்றுவாம்.

2. முன்னு மில்லற முற்றியே
தன்ன லங்கள் தவிர்த்துமே
இன்ன லஞ்செய் திசைபெறும்
அன்ன ரேதமி ழந்தனர்.

96. வளமிலி - பாலை. 2. முன்னுதல்—பொருந்துதல்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம்- வினாக்கள் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் அலைபேசி: 9486772491

இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. இராவண காவியத்தின் ஆசிரியர் யார்?
2. இராவண காவியத்தில் தமிழகப்படலத்தில் குறிப்பிடப்படும் மன்னர்களின் பெயர்களை எழுதுக.
3. இராவண காவியத்தில் தமிழகப்படலத்தில் குறிப்பிடப்படும் தமிழக எல்லைகளை எழுதுக.
4. இராவண காவியத்தில் தமிழகப்படலத்தில் குறிப்பிடப்படும் ஆறுகளை எழுதுக.
5. இராவண காவியத்தில் தமிழகப்படலத்தில் குறிப்பிடப்படும் மலைகளை எழுதுக.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 4 இராவண காவியம் – தமிழகப்படலம்- வினாக்கள் வகுப்பு ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் அலைபேசி: 9486772491

குறுவினாக்கள்

6. இராவண காவியம் நூற்குறிப்பு எழுதுக.

7. இராவண காவியத்தின் ஆசிரியர் குறிப்பு எழுதுக.

8. இராவண காவியத்தில் தமிழகப்படலத்தில் கூறப்படும் செய்திகள் இரண்டினை எழுதுக.

9. இராவண காவியத்தில் தமிழகம் பற்றிய செய்திகளை எழுதுக.

10. இராவண காவியத்தில் தமிழகத்தை ஆண்ட மன்னர்களின் சிறப்பினை புலவர் குழந்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

நெடுவினாக்கள்

11. இராவண காவியத்தின் சிறப்பினையும் நூலாசிரியர் குறிப்பினையும் எழுதுக.

12. இராவண காவியத்தின் தமிழகப்படலத்தில் இடம் பெற்றுள்ள செய்திகளை தொகுத்து எழுதுக.

13. இராவண காவியத்தில் திராவிடச்சிந்தனையும் தமிழகமும் குறித்து எழுதுக.